ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2344/27  2023 අගෝස්තු මස 10 වැනි බ්‍රහස්පතින්දා  2023.08.10

*2344/27 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்*

### தத்துவங்கள் கையளிப்பு

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 (2) ஆம் பிரவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் திருமதி பீ. எஸ். எம். சார்ள்ஸ் ஆகிய நான், வடக்கு மாகான கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உதவுவதற்காக நியமிக்கப்பட்டு இருக்கும் இதன் கீழ் உள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிக்கப்பட்டுள்ளவருக்கு, 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட, 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினாலும் அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினாலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின்*

1A – PG6439 – 8 (2023/08)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

பதிவாளருக்கும் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களை அவ் அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதுள்ள அவர் தம் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்துள் அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியில் இருந்து பிரயோகிக்க இக் கட்டளை மூலம் கையளிக்கின்றேன்.

**திருமதி பீ. எஸ். எம். சார்ள்ஸ்,**
ஆளுநர்.

வடக்கு மாகாணம்,
யாழ்ப்பாணம்,
2023, ஓகத்து 02.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| திரு. விநாயகமூர்த்தி ஜெயந்தன் | 2023.03.31 | கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் 3, 4 (4(2) ஐ தவிர) 5, 6, 7, 8, 33, 39, 42, 43, 44, (44(6) ஐ தவிர) 45,46, 50, 52, 53, 54, 58 (58(2) (அ) உம் அத்துடன் 58 (5) ஐ தவிர) 59, 68, 72 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவாளரின் சகல அதிகாரங்களும் கூட்டுறவு ஒழுங்குவிதிகளின் 4, 11, 15, 16(ii), 18, 19, 20, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49, (49 (xii) ஐ தவிர) 52, 53 ஆகிய ஒழுங்கு விதிகளின் கீழ் பதிவாளரின் சகல தத்துவங்களும். |

EOG 08 - 0099